**IN THE COURT OF THE PRINCIPAL SUBORDINATE COURT, HOSUR.**

**MCOP : 364/2025** **Date : 09-04-2026**

**RW.1 : T. Ramesh**

சாட்சியாக விசாரிக்கப் படுபவர் 1969 ம் ஆண்டின் 54 வது சட்டப்பிரிவு (2) ஏற்பாட்டின் படி திரு. பொ. சண்முகராஜ், எம். எல்., நீதிபதி அவர்களால் ஆணையிட்டு உறுதி வழங்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | T. Ramesh | தந்தை பெயர் | |
| வயது | | கிராமம் | |
| வட்டம் | | மாவட்டம் | Salem |

**<u>முதல் விசாரணை:-</u>**

நான் 2 ஆம் எதிர் மனுதாரர் நிறுவனத்தின் மேலாளர் ஆவேன். எனது தரப்பு முதல் விசாரணைக்காக வழக்கறிஞர் முன்னிலையில் கையொப்பம் செய்த பிரமாண வாக்குமூலத்தை தாக்கல் செய்துள்ளேன். பிரமாண வாக்கு மூலத்தை படித்துப்பார்த்து கையொப்பம் செய்தேன். அந்த கையொப்பம் என்னுடையது தான். அதில் கூறியுள்ள விவரங்கள் சரியானவை. பின்வரும் ஆவணங்களை எனது தரப்பு ஆவணங்களை குறியீடு செய்ய கேட்டு கொள்கிறேன்.

| | | |
|---|---|---|
| Ex R1 | 21.02.2022 | Medical Bills verification report – Original |

மனுவை தள்ளுபடி செய்ய வேண்டுகிறேன்.

**<u>குறுக்கு விசாரணை:-</u>**

என்னுடைய ஆவணத்தில் மொத்தம் சரிபார்க்கப்பட்ட தொகை என ரூ. 1,07,502/- என காட்டப்பட்டுள்ளது என சரிதான். அந்த ரசீதுகள் அனைத்தும் மருத்துவமனை வழங்கியது தான் என்றால் சரிதான். நான்

ரிஜக்டடு பில் என கூறிப்பிட்டுள்ள தொகை மனுதாரரால் கடனாக செலுத்தப்படாத தொகை என்றால் சரிதான். நான் சொல்லியுள்ள மறுக்கப்பட்ட ரசீதுகள் அனைத்தும் மருத்துவமனையால் சிகிச்சைக்காக வழங்கப்பட்ட ரசீதுகள் என்றால் சரிதான்.

**<u>மறுவிசாரணை:-</u>**

மேற்படி நான் கூறிப்பிட்டுள்ள நிராகரிக்கப்பட்ட ரசீதுகள் என்பது மனுதாரரால் பணம் செலுத்தபடாத ரசீதுகள் என்றால் சரிதான்.

**<u>நீதிமன்ற கேள்விகள்:-</u>**

எதன் அடிப்படையில் மேற்படி ரசீதுகள் நிராகரிக்கப்பட்ட ரசீதுகள் என கூறிப்பிட்டுள்ளேன் என்றால் நீதிமன்றத்தில் இருந்து கிடைத்த ரசீதுகள் வைத்து மருத்துவமனையில் விசாரித்த போது, அந்த ரசீதுகளுக்கு தற்போது வரை பணம் கட்டவில்லை என சொன்னார்கள். அதற்கு மருத்துவமனை நிர்வாகம் ஆவணங்கள் தந்ததா என்றால் இல்லை. நான் எப்போது விசாரித்தேன் என்றால் 14.02.2022 அன்று விசாரித்தேன். அதன் பிறகு பணம் கட்டிவிட்டார்களா என்று எனக்கு தெரியுமா என்றால் தெரியாது.

**<u>மறுவிசாரணை இல்லை:-</u>**

Taken down by me in Open Court and interpreted and read over to the Witness and acknowledged by him/her to be correct.

Sd/P.Shunmugaraj, M.L.,
Principal Subordinate Judge,
Hosur.